# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2018

### *15 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*
### *பேச்சுப் போட்டி*

### *தொடர்பாடல் முறைகள்*

*தொடர்பாடல் ஊடகங்கள் நமது வாழ்வோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையவை ஆகும். அவை தகவல் அளித்தல், கல்வி, பொழுதுபோக்கு என்பவற்றிற்கு உதவுகின்றன. இன்று தகவல் தொடர்பாடலில் கடிதம், தொலைபேசி, கணினி, மின்னஞ்சல், இணையம் என்பன முக்கிய பங்காற்றுகின்றன.*

*1876ம் ஆண்டு அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார். இவர் காது கேட்காதவர்களுக்கான ஒரு ஒலி அமைப்பை உருவாக்க முயன்றார். அப்போது தற்செயலாக தொலைபேசியைக் கண்டுபிடித்தார். இன்று உலகமக்களின் தொடர்புக் கருவியாக தொலைபேசி உள்ளது. உலகில் எந்த இடத்தில் இருப்பவருடனும் நினைத்தவுடன் தொடர்பு கொள்ள உதவுகிறது.*

*கணினியின் வருகை இன்று உலகையே எமது கைக்குள் கொண்டுவந்து விட்டது. இணையம் மூலமாக ஒருவர் மற்றவருக்கு அனுப்பும் கடிதம் மின்னஞ்சல் ஆகும். இதற்கு முகவரி உண்டு. மின்னஞ்சல் மூலம் ஒரு படிவத்தையோ செய்தியையோ ஒரேநேரத்தில் பலருக்கு அனுப்பலாம். வேறுபட்ட தூரத்தில் அவர்கள் இருப்பினும் ஒரேநேரத்தில் மின்னஞ்சல் அவர்களுக்குக் கிடைத்துவிடும். மேலும் இது செலவு அற்றது. தகவல் பரிமாற்றத்திற்கு மிகவும் துணைபுரிவது மின்னஞ்சல் என்றால் மிகையாகாது. இணையத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பிருந்தால் உலகின் எந்த மூலைமுடுக்கில் மின்னஞ்சல் கணக்கு வைத்திருக்கும் எவரையும் தொடர்பு கொள்ள முடியும்.*

*உலகெங்கும் உள்ள தகவல் வலைப்பின்னல்களின் ஒருங்கிணைப்பே இணையம் எனலாம். ஒருவகையில் அது மனிதர்களின் இணைப்புச்சங்கிலி என்றே கூறலாம். வேறுபட்ட கலாச்சார, மொழி, இன மக்களை இணைக்கும் பணியை இணையம் செய்கிறது. இன்று பெரும்பாலானோர் இணையத் தொலைபேசியைப் பயன்படுத்தி பிறநாடுகளில் உள்ள உறவினர்கள், நண்பர்களுடன் உரையாடித் தகவல்களைப் பரிமாறி வருகின்றனர்.*

*உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்களையும், தகவல்களையும் மிக எளிதாகவும், விரைவாகவும், சிக்கனமான முறையிலும் தெரிந்து கொள்ள இணையம் உதவுகின்றது. ஆனால் இதனை உரிய முறையில் பயன்படுத்தாவிடின் தீமைகளும் உண்டு இன்று உலகம் சுருங்கி நமது கைகளுக்குள் உள்ளது என்றால் அது இணையம்போன்ற தொடர்பாடல் சாதனங்களின் வருகையே ஆகும். எதிர்கால இளைஞர்களாகிய நாம் தொடர்பாடல் முறைகளை உரிய முறையில் பயன்படுத்தி நன்மை பெறுவோம்.*